செ.வெ.எண்: 52 நாள்:26.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மீன்பிடித்தளங்களில் கரைகளை ஆழப்படுத்த ரூ.3 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், வசந்தம் திருமண மண்டபத்தில் மீன் வளத்துறையின் சார்பில் மீனவர்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.07.2016) நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து, மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீன்வளத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.

இதன்படி தமிழகஅரசு மீனவர்களின் குறைகளை போக்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் மீனவர்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் மணமேல்குடியில் மீனவர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டது.




இதில் மீனவர்கள் தெரிவித்த முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மருத்துவக்காப்பீட்டு அட்டை, உடல் ஊனமுற்றோர் அடையாள அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மீனவர்களிடமிருந்து வரப்பெற்ற 61 கோரிக்கை மனுக்களில் 51 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, ஏற்கப்பட்ட 10 மனுக்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு உடனடி தீர்வு காணப்பட்டது. மேலும் இன்றைய தினம் மீனவர்களிடமிருந்து வரப்பெற்ற 50 மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் மீன்வளத்துறையின் சார்பில் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 5 மீனவர்களுக்கு ரூ.59,750 மதிப்பில் தினப்படி உதவித்தொகைக்கான காசோலைகளும், வருவாய்த்துறையின் சார்பில் 7 நபர்களுக்கு ரூ.84000 மதிப்பில் இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 3 நபர்களுக்கு ரூ.36000 மதிப்பில் இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும், 17 நபர்களுக்கு ரூ.3,20,000 மதிப்பில் விலையில்லா வீட்டுமனைப்பட்டாக்களுக்கான ஆணைகளும் என மொத்தம் 32 பயனாளிகளுக்கு ரூ.4,99,750 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

/2/

நமது மாவட்டத்தில் உள்ள 32 மீனவ கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1500 நபர்களுக்கு நீண்ட நாட்களாக வழங்கப்படாமல் இருந்த வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று சுமார் 600 நபர்களுக்கு விரைவில் வீட்டு மனைப்பட்டா வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீனவ கிராமங்களில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 5 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதுடன் பொன்நகர் கிராமத்தில் போடப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் விரைவில் மின் மோட்டார் அமைக்கும் பணிகள் விரைவில் முடிக்கப்படும். மேலும் தமிழகஅரசு கடலில் மீன்பிடிக்க தடைசெய்யப்பட்ட காலங்களில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கடல் மீனவ குடும்பம் ஒன்றிற்கு நிவாரணமாக ரூ.2000 வழங்கப்பட்டு வருகிறது. இதில் நமது மாவட்டத்தில் 2015-16ம் ஆண்டில் 5240 மீனவ குடும்பங்களுக்கு ரூ.109.80 இலட்சம் மதிப்பீட்டிலும், 2016-17ம் ஆண்டில் 5021 மீனவ குடும்பங்களுக்கு ரூ.100.42 இலட்சம் மதிப்பீட்டிலும் நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மீனவ பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடையும் வகையில் சுயஉதவிக்குழுக்கள் மூலம் கடன் உதவி வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் உயர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீனவர்கள் கடலுக்குள் செல்லும் பொழுது உயிர் காக்கும் அனைத்து பாதுகாப்பு சாதனங்களையும் தவறாமல் கொண்டு செல்வதுடன் மீனவர்களை பாதுகாக்க இந்தியக்கடற்படை, கடலோர காவல் படை, மீன்வளத்துறை போன்ற அனைத்து துறை அலுவலர்களும் 24 மணிநேரமும் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். எனவே, மீனவர்கள் சர்வதேச கடல் எல்லைகளை தாண்டாமல் நமது பகுதிகளிலேயே மீன்பிடிப்பதுடன் மீன்வளத்தை பாதுகாக்கும் வகையில் தடை செய்யப்பட்ட இரட்டை மடிவலை மற்றும் அரிப்புவலைகளை பயன்படுத்துதல் கூடாது. மேலும் மீனவர்கள் தங்களது படகுகளை கரைக்கு கொண்டு வரும் வகையில் கரைகளில் உள்ள மணல்களை அகற்றி ஆழப்படுத்தும் வகையில் சுமார் ரூ.3 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தமிழகஅரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இதன் மூலம் இத்திட்டத்தை நிறைவேற்ற உலக வங்கி நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மீனவர்கள் தெரிவித்துள்ள அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, உதவி இயக்குநர் திரு.சேகர், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரம்யாதேவி, லெப்டினல் கமாண்டர் திரு.பல்வீர்சிங், நபார்டு வங்கி மாவட்ட மேலாளர் திரு.சோமசுந்தரம், வட்டாட்சியர்கள் திரு.சுரேஷ்கண்ணா, திரு.பழனிச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.முத்து,

திரு.செல்வராஜ், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், மீனவச்சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.